பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 21 | ஞாயிற்றுக்கிழமை | 04.02.2024 | அதிர்வு 187

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள

## கெஹலிய ரம்புக்வெல வைத்தியசாலையில்!



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார 06▶



# தமிழர் தேசத்தின் கறுப்பு நாள் இன்று

## கிளிநொச்சியில் சுதந்திர தின எதிர்ப்புப் பேரணி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் இன்றைய சுதந்திர தின நாளைக் கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி, கறுப்பு தினப் பேரணியை முன்னெடுக்க யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத் தீயிலிருந்து தமிழர் தாயகத்தைக் காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்புக்காகவும் இன்று கிளிநொச்சி, இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்தி வரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள அனைவரையும் உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம் என்று யாழ். பல்கலைக்கழக ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. 06▶

## எதிர்ப்புப் போராட்டங்களை முடக்க பொலிஸ் எடுத்த முயற்சி தோல்வி

### தடையுத்தரவு கோரும் மனு நீதிமன்றால் நிராகரிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதிய பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவைப் பெற முயற்சித்த 06▶



தம்மிக்க பெரேரா எம்.பி. பெரும் கோடீஸ்வரவர்த்தகர். வரும்ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்படக் கூடியவர்களின் பட்டியலில் அவரின் பெயரும் முதல் நிலையில் உள்ளது. அதற்கான வாய்ப்புகள், ஏற்பாடுகள் குறித்து அவர் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்காக தெற்கில் பல சிறிய கட்சிகள், முக்கிய அமைப்புகள் போன்ற 06▶

# இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்துக்கு சட்டவிரோத அங்கீகாரம் வழங்கப்பட்டது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டு



**உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளின் ஒரு பகுதியை புறக்கணித்து இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்துக்கு சட்டவிரோதமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

**காலி மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்த போதிலும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

அதனை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினாலும், உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளில் ஒரு பகுதியை புறக்கணித்து, சட்டமூலம் குறித்து கவனம் செலுத்தாமல் தமக்கு சாதகமான முறையில் அரசாங்கத்தினரும் சபா நாயகரும் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உயர்நீதிமன்றத் தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் 9 இடங்களில் நடை முறைப்படுத்தப்படவில்லை ." – என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளர் யார்?

## பஸிலின் வருகைக்காக காத்திருக்கும் 'மொட்டு'



"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை மக்கள் கேட்கின்றனர். எனவே, அது தொடர்பில் விரைவில் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை எடுங்கள்" – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடன் தலைமைப்பீடத்திடம் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தமது கட்சி வேட்பாளராக தற்போதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பெயரிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைப் பெயரிட்டுள்ளது. அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அநுரகுமார திஸாநாயக்கவைக் களமிறக்கவுள்ளது.

எனினும், தமது கட்சி வேட்பாளரை நிறுத்துமா அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமா என்பது தொடர்பில் மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் குழப்பம் நிலவுகின்றது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பவுள்ளார், அவர் நாடு திரும்பிய பின்னர் விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளார். அந்தக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் குறித்த மொட்டுக் கட்சியின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்படவுள்ளது.

# இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிக்கொலை!

இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மத்துகம, ஓவிட்டிகல பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

34 வயதுடைய நபரே வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.


உயிரிழந்தவரும் அவரைத் தாக்கினார் எனக் கூறப்படும் சந்தேகநபரும் நெருங்கிய உறவினர்கள் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக நிலவி வந்த தனிப்பட்ட தகரா றின் காரணமாக மேற்படி நபர் கொலை செய்யப்பட் டுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

இவர்கள் இருவரும் சட்டவிரோத மதுபானம் கடத் தல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டு வந்தவர் கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியவர் எனக் கூறப்படும் 27 வயதுடைய சந்தேகநபர், தாக்குதலின் பின்னர் தலை மறைவாகியிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# குடலில் கிருமித் தொற்றால் இளம் தாய் பரிதாப மரணம்



குடலில் கிருமி பரவலால் மாதகலைச் சேர்ந்த 28 வய தான இளம் குடும்பப் பெண் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 31ஆம் திகதி குழந்தை இறந்த நிலையில் இவருக்குப் பிறந்துள்ளது. தாயாரின் உடல் நிலையும் தொடர்ச்சியாக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அவசர சிகிச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்ட அவர் கடந்த வியாழக்கிழமை உயி ரிழந்துள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோத னையில் குடலில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரத்தைப் பாதுகாப்பது ஆட்சியாளர்களதும் பொறுப்பு

## சுதந்திர தின செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

**சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நிபந்தனையின்றி பாடுபடுவது ஆட்சியாளர்களதும் பொறுப்பாகும்.**

**போர்த்துகீசர்களாலும்,ஒல்லாந்தர்களாலும் பின்னர் 1815 முதல் 1948 வரை ஆங்கிலேயர்களாலும் முழுமையாக காலனித்துவப்படுத்தப்பட்டிருந்த நாம் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டோம்.**

**அவ்வாறு சுதந்திமடைந்து இன்று பெப்ரவரி 04 ஆம் திகதியுடன் 76 ஆண்டுகள் நிறைவடைகின்றன.**

**இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்துள்ளார்,**



இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

உயரிய சுதந்திரத்துக்காக நாடு எதிர்கொண்ட அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள, கடந்த காலம் தொட்டு இன்று வரை உயிர் தியாகம் செய்த அனைத்து தேசப்பற்றாளர்களுக்கும் தேசத்தின் மரியாதையும் அஞ்சலியும் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்று 76 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பெற்ற சுதந்திரத்தை தேசிய, சமூக, கல்வி, மத ரீதியிலாக அர்த்தமுள்ளதாக்க நாம் தவறிவிட்டோம்.

1948 இல் இருந்து,76 வருடங்களாக பல்வேறு சவால்களை எதிர்கொண்டு நாம் பெற்ற அரசியல் சுதந்திரத்தை பொருளாதார மற்றும் சமூக சுதந்திரமாக மாற்றும் பொறுப்பு எமக்கு உள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் குறுகிய பேதங்கள் போலவே இனவாத மற்றும் மதவாத உணர்வுகளுடன் அரசியல் களம் மிகவும் அழுக்கடைந்து போயுள்ளமையால்,நாம் ஒரு நாடாகப் பிரிந்து பல துரதிஷ்டவசமான அவலங்களை எதிர் கொண்டோம்.

இதன் பிரகாரம், ஒரு நாடாக அடைந்த சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் தோல்விகளை கடந்த 76 ஆண்டுகளில் நமக்கு நல்ல பாடங்களைப் போதித்திருக்கின்றன.

'சுதந்திரம்' என்பது கிடைத்தவுடன் சும்மா கிடக்கும் ஒன்றல்லாது, தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பு முழு குடிமகனின் பொறுப்பாகும். சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நிபந்தனையற்ற அர்பணிப்பை வழங்குவதும் ஆட்சியாளர்களினதும் பொறுப்பாகும்.

மக்களின் சுதந்திரத்துக்கு வேலி போட்டு, வரையறையின்றிய திட்டத்திற்குள் அரசு இறங்கியிருப்பது அவலம் என்பதோடு, மனித சுதந்திரத்தை பாதுகாப்பதாக உறுதிமொழி எடுக்குமாறு சுதந்திர தினத்தன்று அரசுக்கு வலியுறுத்த இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கிறேன்.

அத்துடன்,இலங்கையர்களாகிய நமக்கு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே கிடைத்த சர்வஜன வாக்குரிமை என்பது சுதந்திர நாட்டில் மக்களிடம் உள்ள பலமான உரிமையாகும்.ஜனநாயக சமூகத்துக்கான இருப்பையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் சர்வஜன வாக்குரிமைக்கு சவால் விடுவதானது நாட்டின் சுதந்திரத்திற்கு சவால் விடுவதானதாகும்.இந்தத் தருணத்தில் இந்தச் சவாலை எமது தாய் நாடு எதிர்கொண்டிருப்பது பாரதூரமான பேரிடராகும்.

மக்களின் சுதந்திரத்துக்குத் தடை விதிக்கும் சட்டங்களை நிறைவேற்றி, தற்போதைய ஆட்சியாளர்கள் நடந்து கொள்ளும் விதம், நாம் பெற்றுள்ள சுதந்திரத்தினுள் உரிமையாக்கிக் கொண்ட ஜனநாயக ஆட்சியை சர்வாதிகாரமாக மாற்றும் முயற்சியாகும்.

இந்த முயற்சியை முறியடிக்க நாட்டின் சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்போடு செயல்படும் சகல சக்திகளும் ஒன்றிணைய வேண்டியது, இந்த சுதந்திர தினத்தில் நமது அபிலாஷையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.- என்றுள்ளது.

# இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட நான்கு கிலோ தங்கம் இந்தியாவில் சிக்கியது



**(ந.லோகதயாளன்)**

இலங்கையில் இருந்து இராமேஸ்வரம் பகுதிக்குக் கடத்திச் செல்லப்பட்ட 4.5 கிலோகிராம் தங்கம் இந்தியச் சுங்கத்துறை அதிகாரிகளால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருகே குந்துகால் கடல் பகுதி வழியாக இலங்கையில் இருந்து தங்கக் கட்டிகள் கடத்தி வரப்படுகின்றன என்று இந்தியச் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற சுகங்கத்துறை அதிகாரிகள் சந்தேகத்துக்கிடமாக படகில் இருந்து நடந்து வந்த நபரைப் பிடித்து விசாரணையில் ஈடுபட்டபோது முன்னுக்குப் பின் முரணான பதிலைக் கூறியதை அடுத்து அவரைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போதே இலங்கையில் இருந்து 4.5 கிலோ கிராம் தங்கக் கட்டிகள் கடத்தி வரப்பட்டமை தெரியவந்ததை அடுத்து அவரிடம் இருந்து தங்கக் கட்டிகளைப் பறிமுதல் செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார், பேசாலைப் பகுதியூடாக இந்தத் தங்கக் கட்டிகள் கடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை தாரை வார்க்கப்பட்ட தினமே பெப்.04

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவிப்பு




ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை சிங்களவர்களிடம் தாரை வார்க்கப்பட்ட தினமாகவே சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெப்ரவரி 4 திகதி என்பது ஈழத் தமிழர்களை பொறுத்த வரை தங்களது சுயநிர்ணய உரிமையை பிரித்தானியர்கள் பறித்து சிங்களவர்களுக்கு தாரை வார்த்த தினமாகவே பார்க்கின்றனர். அத்துடன் தங்களின் சுதந்திரம் பறிபோன கரி நாளாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பிரித்தானிய காலணித்துவம் இலங்கைக்கு வரும் போது இரண்டு தேசங்களில் சிங்களவரும் தமிழர்களும் தனித்தனி யாகத் தங்களது சுயநிர்ணய உரிமையுடன் தன்னாட்சியை நடத்திக் கௌரவமாக வாழ்ந்தனர்.

ஆனால் 1815 ஆண்டு கண்டி ராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் பல ராச்சியங்களாக இருந்த நாட்டை ஒற்றையாட்சி அரசியலமைப்பான கோல்புறுக் யாப்பை 1833 இல் நடைமுறைக்கு கொண்டு வந்து ஒற்றையாட்சி நாடாகப் பிரகடனப்படுத்தினர்.

கோல்புறுக் யாப்பில் இருந்து சோல்பரி அரசியலமைப்பு வரை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுப்படுத்திய பிரித்தா னியர், சுதந்திரம் என்ற பெயரில் பல இன மக்கள் வாழும் நாட் டைத் தங்களுடைய பூகோள நலனுக்காக ஒற்றையாட்சி முறைக்குள் ஒரு இனத்திடம் ஆட்சியை ஒப்படைத்தமை ஏனைய இனங்கள் அடக்கு முறைக்கு உள்ளாவதற்கு வழி கோலியது.

இதனால் தமது இறைமையை இழந்த இனமாக ஈழத் தமிழர்கள் மாறியதுடன் சுதந்திரத்தை பறி கொடுத்தவர்களாக வும் அவலப்படுகின்றனர். இதனால் தமிழர்களுக்கு பெப்ரவரி 4 ஆம் திகதி கரி நாளாகவே அமைந்து விட்டது.

# சனத் நிஷாந்தவின் மனைவிக்கு தேசியப் பட்டியல் எம்.பி. பதவி



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி திருமதி சமரி பெரேராவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிப் பது தொடர்பில் அந்தக் கட்சியினால் அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்க்ஷ தலைமையிலான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஏற்கனவே கலந்து ரையாடலை நடத்தியுள்ளது.

மேற்படி பிரேரணை கட்சியின் மத்திய குழு மற்றும் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு கட்சியின் உயர்மட்ட தலைமையின் ஆசி யும் கிடைத்துள்ளது என தெரியவருகிறது.

# வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் கரி நாளாக அனுஷ்டிப்போம்!

## சுதந்திர தினத்தில் சட்டத்தரணி சுகாஸ் அழைப்பு



பிச்சை எடுத்தாவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசு முடிவெடுத்துள்ளது. எனினும் வடக்கு - கிழக்கு எங்கும் கரி நாளாக அனுஷ்டிப்போம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதி யில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கரத்துத் தெரிவித்த போது மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்துள்ளவை வருமாறு,

பிச்சை எடுத்தாவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசு முடிவெடுத்துள்ளது. எனினும் தமிழ் தேசத்தை பொறுத்த வரை இது ஒரு கரிநாள்.

எமக்கு சுதந்திரமோ அல்லது விடுதலை மற்றும் உரி மைகள் கிடைக்கப் பெறாமையை உறுதிப்படுத்துவதற்காக வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களும் பொது அமைப்புகளும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் தமிழ் தேசிய முன்னணியி னராகிய நாங்களும் அணி திரண்டு எதிர்ப்பைப் பதிவு செய்ய இருக்கின்றோம்.

எனவே சுதந்திர தின நாளைப் பகிஸ்கரித்து தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் சொல்வதற்கு இந்த நாளை பயன்படுத்துவோம்.- என்றார்.

# இளைஞர் கடத்தப்பட்டு காட்டில் வைத்து தாக்குதல்

## சந்தேகநபர் ஒருவர் கைது

எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று காட்டுப் பகுதியில் வைத்து ஆயுதங்களால் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான இளைஞர், பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மூளை நரம்பு வெடித்து மன்னார் இளைஞர் சாவு

## ஐஸ் போதைப்பொருள் பயன்பாடே காரணம்



உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்திய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மன்னார், பேசாலையைச் சேர்ந்த 22 வயதான இளைஞரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மூளை நரம்பு வெடித்தமை காரணமாக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்தியாமையால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கிளிநொச்சியில் விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்!



கிளிநொச்சி, உமையாள்புரத்தில் ஹைஏஸ் – பஸ் விபத்தில் சிக்கி, அந்த வீதியால் மாடுகளை நடத்திக் கொண்டு சென்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கோபாலசிங்கம் சதீஸ்குமார் (வயது – 25) என்ற மேற்படி இளைஞரே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

# சைக்கிளில் சென்ற நபர் கீழே வீழ்ந்து கழுத்து முறிந்து சாவு!

சைக்கிளில் சென்ற நபர் கீழே வீழ்ந்து கழுத்து முறிந்து உயிரிழந்துள்ளார்.

42 வயதான மேற்படி நபர் யாழ். தெல்லிப்பழையில் சைக்கிளில் சென்ற நிலையில் திடீரென கீழே வீழ்ந்து கழுத்து முறிந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் கழுத்து எலும்பு முறிந்தமையே உயிரிழப்புக்குக் காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வற்றின் தலைவர்களைத் தவறாது சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றார். அவர் பெரும் கோடீஸ்வரர் என்பதால் இத்தகைய சந்திப்புகளில் சில, பல அமைப்புக்கள் மற்றும் கட்சிகளின் தலைவர்களுக்கு ஐந்து, பத்து லகரங்கள் வெகுமானமாக கை மாறுவதாகவும் பேச்சுக்கள் உண்டு. அத்தொகைகள் அவருக்குக் கால் தூசுக்குச் சமம்.

இதை நம் தமிழ் தலைவர் ஒருவர் அறிந்து வைத்திருந்தார் போலும். அவரும் வாய்ப்புக்குக் காத்திருக்கக் கூடும்.

கடந்த 26 ஆம் திகதி மாலை கொழும்பில் இந்திய ஹவுஸில் இந்தியக் குடியரசு தினத்தை ஒட்டிய சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. நூற்றுக்கணக்கில் அரசியல் தலைவர்கள், ராஜதந்திரிகள், மூத்த பத்திரிகையாளர்கள் திரண்டிருந்தனர். தம்மிக்க பெரேராவும் வந்திருந்தார். நமது தமிழ்க் கட்சியின் தலைவரும் அங்கிருந்தார். ஆனால் ஒருவருக்கொருவர் முன்பின் அதிகம் அறிமுகம் இல்லை. நாடாளுமன்றத்திலும் சந்தித்துப் பேசியிருக்க மாட்டார்கள் போலும்.

தம்மிக்க பெரேராவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உரையாடிக் கொண்டிருந்தபோது நமது தமிழ் கட்சித் தலைவரும் உள் நுழைந்தார். கை குலுக்கினார். வேறு வழியின்றி அமைச்சர் டக்ளஸ் இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தார்.

விசிட்டிங் கார்டுகள் கைமாறின. சந்திப்புக்கான பரஸ்பர அறிமுகம் முடிந்தாயிற்று. விரைவில் சந்திப்பார்கள். லகரங்கள் கை மாறுமோ தெரியவில்லை. ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

\+ \+ \+

பாண் தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒரு கட்டுப்பாட்டை விதித்து இருக்கின்றது. அது விலைக் கட்டுப்பாடு அல்ல; எடைக் கட்டுப்பாடு.

பாணுக்கு இப்போது கட்டுப்பாட்டு விலை இருப்பதாகத் தெரியவில்லை. இடத்துக்கு இடம் – தரத்துக்குத் தரம் – வித்தியாசமான விலையில் அது விற்பனையாகின்றது. அதுபோலவே அளவும் எடையும்.

இப்போது எடைக்குக் கட்டுப்பாடு வந்திருக்கின்றது. ஒவ்வொரு பாண் ரகம் தொடர்பிலும் அதன் எடையின் அளவை அந்த வர்த்தக நிலையம் பகிரங்கமாகக் காட்சிப்படுத்த வேண்டும். ஒரு றாத்தல் பாண் என்றால் நிச்சயமாக அது 450 கிராமாக இருக்க வேண்டும். 13.5 கிராம் கூடிக் குறையலாம். அவ்வளவுதான்.

அதுபோல அரை றாத்தல் பாண் என்றால் 225 கிராம் இருக்க வேண்டும்.

கட்டுப்பாடு விலையை நிர்ணயிக்க முடியாதவர்கள், குறைந்த பட்சம் எடையையாவது ஒழுங்குபடுத்துகிறார்கள் என்று சந்தோஷப்பட வேண்டியதுதான்.

\+ \+ \+

அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மொட்டு கட்சியின் பிரமுகர்களுக்கும் இடையில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டம் பகைமைத் தன்மையுடன் முடிவுற்றதாக அறிய வருகிறது.

இந்தக் கூட்டம் முதலில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறுவதாக இருந்தது. கடைசி நேரத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு அது இடம் மாற்றப்பட்டது.

அது தங்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான நேரடிப் பேச்சு என்ற எதிர்பார்ப்புடன் வந்திருந்த மொட்டுக் கட்சிப் பிரமுகர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களும், நிமல் லான்ஸா புதிதாகத் தொடங்கி இருக்கும் ரணில் ஆதரவுக் கூட்டணியின் சில பிரமுகர்களும் கூட கூட்டத்தில் பிரசன்னமாகி இருந்தனர்.

இது குறித்துத் தமது அதிருப்தியை மொட்டு கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அங்கு நேரடியாகவே வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எழுந்தமானமாக – கண்மூடித்தனமாக – பேசத் தமது கட்சி தயாரில்லை என்று அவர் அங்கு நேரடியாக தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய இணக்கப்பாடு குறித்துப் பேசுவதற்கு முன்னர், கவனிக்கப்பட வேண்டிய பல முக்கிய விடயங்கள் உள்ளன என்று நாசூக்காக ஜனாதிபதிக்கு ஒரு தட்டுக் கொடுத்தார் அவர்.

ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுத் தரப்பின் ஆதரவை ரனில் விக்கிரமசிங்க பெறுவதாயின் அதற்கு முன்னர் பல விடயங்களை அவர் செய்ய வேண்டும் என்று மொட்டு எதிர்பார்க்கின்றது. அவற்றின் விவரம்தான் தெரிய வரவில்லை.

ரணிலுடன் தனித்துப் பேசும் போது தான் தனது விடயங்களை – நிபந்தனைகளை – எதிர்பார்ப்புகளை – மொட்டுக் கட்சி அவிழ்த்து கொட்டும் போல.

## கெஹெலிய ரம்புக்வெல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கைதான கெஹலிய ரம்புக்வெல நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். இதன்போது அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டது.

தரமற்ற இம்யூனோகுளோப்ளின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதையடுத்து, சுமார் 10 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

## தமிழர் தேசத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

இந்த விடயம் தொடர்பில் மேற்படி மாணவர் ஒன்றியத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

"பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து இலங்கை, 04.02.1948ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள்.

ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சி அதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்கு முறைகளுக்கே வழிகோலியது.

2009 ஆண்டு இனப் படுகொலை எனும் கோர முகமாய் அந்த ஒடுக்கு முறை வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்த ஒன்றே.

இலங்கையின்சுதந்திரத்துக்குமுன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு என்பது சிங்கள குடியேற்றத் திட்டங்கள், இராணுவ மயமாக்கல் முதல் கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிர நிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் (பெப்ரவரி 04, 2024) இன்றைய நாளைக் கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துக் கறுப்பு தினப் பேரணியை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள – பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3.தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள – பௌத்த மயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்புகளை முன்னின்று நடத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத் தீயிலிருந்து தமிழர் தாயகத்தைக் காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்புக்காகவும் இன்று கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள அனைவரையும் உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம்." – என்றுள்ளது.

## எதிர்ப்புப் போராட்டங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதிலும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரால் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலருக்குப் போராட்டம் நடத்தத் தடை விதிக்கக் கோரிய மனுவை யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் பா.தவபாலன் நேற்று நிராகரித்தார்.

பதில் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் சென்ற பொலிஸார் தடையுத்தரவு கோரும் மனுவைச் சமர்ப்பித்த போதும், போராட்டம் நடத்துவதற்குப் பொதுமக்களுக்கு உரித்துண்டு எனவும், சுதந்திர தின நிகழ்வுகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் போராட்டங்களை நடத்த முடியும் எனவும் பதில் நீதிவான் தெரிவித்தார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் நாடளாவிய ரீதியில் இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில் சுதந்திர தினத்தைக் கரி நாளாக வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளதுடன் யாழ்ப்பாணத்திலும் போராட்டங்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# எங்கள் மருமகன் தமிழக முதல்வராவாரா?

## விஜய்யின் கட்சி தொடர்பில் மனோவின் 'பேஸ்புக்'கில் இப்படிப் பதிவு



**"அமெரிக்க உப ஜனாதிபதி கமலா, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் ஆகியோர் வென்ற போது, சொல்லிக்கொண்டது போல், விஜய் கட்சி வெற்றி பெற்று அவர் அங்கே முதலமைச்சரானால், "எங்கள் மருமகன் தமிழக முதலமைச்சர்" என்று இலங்கையில் நாம் சொல்லிக்கொள்ளலாம்."**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.**



நடிகர் விஜய்யால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'தமிழக வெற்றி கழகம்' எனும் கட்சி தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. தனது "பேஸ்புக்" பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"தமிழ்நாட்டில் இன்று அதிரடி பேச்சு பொருள், நடிகர் விஜய்யின் "தமிழக வெற்றி கழகம்".

தமிழ்நாடு இலங்கைக்குச் சமீபமான தமிழர் பெரும்பான்மையாக வாழும் அரசியல் அலகு. ஆகவே, அங்கே நடப்பதை பற்றி கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது.

விஜயகாந்த் வரை புதுக்கட்சி ஆரம்பித்த அனைவரும் "திராவிடம்" என்ற சொல்லை, கட்சி பெயரில் சேர்த்துக் கொண்டார்கள். சீமான்தான் முதலில் "திராவிடம்" என்பதை சித்தாந்த ரீதியாக கைவிட்டு, அதற்குப் பிரபல மாற்றாக தமிழ்த் தேசியம் என்பதைக் கையில் எடுத்தார்.

விஜய்யின் அரசியல் கட்சியும் "திராவிடம்" என்பதைக் கைவிட்டு விட்டது. ஆனால், "கழகம்" என்பதை விடவில்லை. சித்தாந்த ரீதியாகவா இதுவென சொல்ல இது காலமில்லை. கட்சி பெயரை ஆங்கிலத்தில் எழுதினால், வுஏமு. அதை, தளபதி விஜய் கழகம் என்றும் யோசித்தார்கள் போலும்.

சமகாலத்தில் கமல் சினிமாவில் வீழ்ச்சியை உணர்ந்து கட்சி ஆரம்பித்தார். அதன்பிறகு அவரது ஒரு படம் சிறப்பாக ஓடி சினிமாவில் அவருக்கு மறுவாழ்வு கொடுத்திருப்பது வேறு விடயம். இப்போது அவரது கட்சி ஏறக்குறைய கரைந்த கட்சி. இனி கலைந்த கட்சிதான். எம்.ஜி.ஆர். சந்தையில் உச்சத்தில் இருக்கும்போது, தனிக்கட்சி ஆரம்பித்தார். அதுபோல், சந்தையில் உயரத்தில் இருக்கும்போதுதான், விஜய்யும் கட்சி ஆரம்பித்துள்ளார்.

இந்தக் கட்சி, வெற்றி பெறுகின்றதோ, இல்லையோ, தமிழ் சினிமாவில் விஜய்யின் வெற்றிடம், அவரையடுத்த நடிகர்களுக்கு, இன்று பார்ட்டி போட்டு தூள் கிளப்பும் பேரானந்தத்தைத் தந்திருக்கும். வயதானாலும் ரஜனிக்கு இன்னும் இரண்டு வருடம் எக்ஸ்டென்சன் போடுங்கப்பா..!

அரசியல் ரீதியாக, சீமான் தாக்குப் பிடிப்பார். அ.தி.மு.க., அண்ணாமலை பி.ஜே.பி. ஆகியவற்றுக்கு உடன் ஆபத்து! தன் தந்தை சந்திரசேகரை, விஜய் திட்டமிட்டு ஒதுக்கி வைத்துள்ளார் என எண்ணுகின்றேன். அவரை இதில் உள்வாங்கினால் கட்சி, கோமாளிகள் கும்மாளம் ஆகிவிடும் என்ற பயம் விஜய்க்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்.

இந்திய பொருளாதார வளர்ச்சியில், தமிழ்நாடு முதலாவது, இரண்டாவது இடத்தில் இருக்கும் மாநிலம். தமிழ்நாட்டு மாநில அரசுகள் எப்படியோ, மாநிலம் வளர்ந்து விட்டது. அதன் காரணம் அங்கு நிலவும் சமநீதி சமுதாய கொள்கை, கல்வி வளர்ச்சி, கடும் முயற்சியாளர்கள், உழைப்பாளர்கள் சார்ந்த தனியார் துறை பொருளாதாரம். அதனால்தான் தமிழகம் இன்று இந்தியாவில் மிகவும் அதிக நகரமயமாக்களை கண்ட மாநிலம் ஆகியுள்ளது.

ஆகவே, சமநீதி கொள்கையை, "தமிழக வெற்றி கழகம்" கைவிடகூடாது என்பது என் எதிர்பார்ப்பு. மற்றபடி, எல்லாம் ஊகங்கள்தான். பொறுத்துப் பார்க்கலாம்...!

கடைசியாக சிரித்து மகிழ ஒன்று. அமெரிக்க உப ஜனாதிபதி கமலா, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் ஆகியோர் வென்ற போது, சொல்லிக்கொண்டது போல், விஜய் கட்சி வெற்றி பெற்று அவர் அங்கே முதலமைச்சரானால், "எங்கள் மருமகன் தமிழக முதலமைச்சர்" என்று இலங்கையில் நாம் சொல்லிக் கொள்ளலாம்..!" – என்றுள்ளது.

# யாழில் விபத்தில் காயமடைந்தவர் நிமோனியா காய்ச்சலால் மரணம்!

விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்துள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வரட்ணம் பாலசந்திரன் (வயது – 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் மோட்டார் வாகனத்தில் பயணித்த அவர் நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் ஒருவார காலமாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்குள்ளான நிலையில் நிமோனியா காய்ச்சல் மூலம் ஏற்பட்ட கிருமித்



தொற்று பரவிய நிலையில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுதந்திர தினம் எப்போது?

வெள்ளையரின் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற நாளை இலங்கை தீவு தனது சுதந்திர தினமாக இன்று கொண்டாடுகின்றது.

இந்த இலங்கை தீவில் வடக்கையும், கிழக்கையும் தமது பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழர்களைப் பொறுத்தவரை இது கொண்டாட்டத்துக்குரிய நாளன்று. சுதந்திர தினமன்று. இது அடிமைத்துவத் தினம். கரிநாள். அடக்குமுறை வேதனையின் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் அவல நாள்.

ஆங்கிலேயே ஆட்சியாளர்களிடமிருந்து தென்னிலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பௌத்த - சிங்களவர்களுக்கு இத் தினத்தில் விடுதலை கிடைத்தது. அத்தோடு தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பு அதிகாரமும் கூட அவர்களுக்கு இத்தினத்தில் கைமாறியது.

அதன்படி பார்த்தால், தமிழர் தேசத்தை சிங்களவர் தேசம் அடிமைப்படுத்திய தினமாகவும், தமிழர் தேசம் சிங்களத்திடம் அடிமைப்பட்ட நாளாகவும் இது அமைகிறது.

அதனால்தான் இத்தினத்தைக் கறுப்பு நாளாகத் தமிழர் தேசம் சோகத்துடன் அனுஷ்டிக்கின்றது.

1505 இல் இலங்கை தீவில் முதல் அந்நிய ஆதிக்க சக்தியாக போர்த்துக்கேயர்கள் காலடி எடுத்து வைத்த போது இலங்கை தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் தனித் தனி இறைமை கொண்ட இரு வெவ்வேறு இராச்சியங்களில் வசித்து வந்தனர்.

காலப்போக்கில் இந்த ரெண்டு இராச்சியங்களும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லந்தரிடமும் பின்னர் ஆங்கிலேயரிடமும் வீழ்ந்து போனமை வரலாறு.

இப்படி இரண்டு இராச்சியங்களாகப் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து ஆரம்பத்தில் ஆங்கிலேயராலும் நிர்வகிக்கப்பட்ட இலங்கை தீவை 1833 ஆம் ஆண்டு வெள்ளையர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காக ஒரு குடையின் கீழ் - ஒரு நிர்வாகத்தின் கீழ் - கொண்டு வந்தனர்.

அந்த ஆட்சி முறையை அடுத்த 115 வருடங்களுக்குத் தொடர்ந்த வெள்ளையர்கள், தங்கள் நிர்வாக வசதிக்காகத் தாங்கள் ஒன்றிணைத்த இரண்டு இராச்சியங்களையும் - தமிழர் தேசத்தையும் சிங்களவர் தேசத்தையும் - தாங்கள் 1948 இல் அதிகாரத்தை கையளித்து இலங்கைதீவில் இருந்து புறப்பட்டபோது, அட்சர கணித எண்ணிக்கைக் கணக்கில் பெரும்பான்மையினரான சிங்களவரின் கைகளில் ஒப்படைத்துச் சென்றனர்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் இறைமை இப்படித்தான் முதலில் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து வெள்ளையரினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், கடைசியில் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி தீவின் பெரும்பான்மையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆகவே தமிழர் தேசத்தின் தனித்துவ சுதந்திரமும் இறைமையும் அவற்றைக் கைப்பற்றி வைத்திருந்த வெள்ளையரின் காலனித்துவத்திடமிருந்து சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் கைகளுக்கு மாறிய நாளைக் கொண்டாடுவதற்கோ, அனுஷ்டிப்பதற்கோ தமிழரிடம் ஏதுமில்லை. அடிமைத்தனத்தின் மீதான மேலாதிக்க உரிமை வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து பௌத்த - சிங்களப் பேரினவாதத்திடம் கைமாறியமையை ஒட்டி துக்கம் கொண்டாடுவதைத் தவிர.

வெள்ளையர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற இந்த 76 ஆண்டுகளில் தமிழர் தேசம் தனது கொடி உரிமை, குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, நில உரிமை, தொழில் உரிமை, பண்பாட்டு உரிமை, மரபுரிமை என்று அனைத்தையும் - வாழ்வுரிமை வரை எல்லாவற்றையும் - தொலைத்து எமது தாயக மண்ணிலேயே வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கப்பட்டிருக்கும் நிலைமையே இங்கு கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. அல்லது வேரடி மண்ணோடு பூமிப் பந்தெங்கனும் தூக்கி வீசப்பட்டு சின்னா பின்னப்படுத்தப்பட்டு கிடக்கின்றது தமிழினம்.

வாளேந்திய சிங்கக் கொடி தமிழர்களைஅடிமைப்படுத்தும்குறியீடு. அந்தக் கொடி உயர்வதைக் கண்டு பேருவகை அடைவதற்கு தமிழருக்கு ஏதுமில்லை. மாறாக, உள்ளக் குமுறலையும், விசனத்தையுமே அந்தக் கொடி ஏறுவது தமிழர் மனத்தில் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

வரலாற்று ரீதியான எமது தாயகத்தில், எமது சுதந்திர இறைமையை நாம் மீட்டெடுத்து, எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் விதத்திலான சுயநிர்ணய உரிமையுடன், தன்னாட்சியை முன்னெடுக்க என்று வாய்ப்புக்கு கிட்டுகின்றதோ அன்றுதான் தமிழினத்திற்கு உண்மையான சுதந்திர தினம்.

# பா.ஜ.க. அவதூறுகளைப் பரப்பி தி.மு.கவை வீழ்த்திவிட முடியாது




## முதல்வர் ஸ்டாலின் உறுதி

"அவதூறுகளைப் பரப்புவதில் பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் சளைத்தவையல்ல. பா.ஜ.க. எத்தகைய நாடகத்தை நடத்தினாலும் தி.மு.க. கூட்டணியை வீழ்த்த முடியாது."

– தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழகத்துக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐரோப்பாவின் ஸ்பெயின் நாட்டில் இருக்கிறேன். அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்பதே, கருணாநிதி வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களில் முதலானது. அதனை முன்னெடுத்து, அயாராது உழைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் மட்டுமின்றி, நாடு முழுமைக்கான வெற்றி வியூகத்தை வகுக்க வேண்டிய பொறுப்பு நிறைந்த இடத்தில் தி.மு.க. இருக்கிறது.

பாசிச பா.ஜ.க. ஆட்சியின் சர்வாதிகார போக்குக்கு முடிவு கட்ட வேண்டிய உறுதியுடன் உள்ளோம். மாநில உரிமைகளை கட்டிக்காக்க தேர்தலின் வெற்றி மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து, தேர்தல் பணிகளை தி.மு.க. முன்கூட்டியே முன்னெடுத்துள்ளது. நாடாளுமன்ற தேர்தல் பணிகளுக்காக, தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தைக் குழு, தேர்தல் அறிக்கைகுழு, தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு என 3 குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை பணிகளை உடனடியாக தொடங்கிவிட்டன. இதில், டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான குழுவினர் காங்கிரஸுடன் முதல் சுற்று பேச்சுவார்த்தைகளை முடித்து, மற்ற தோழமை கட்சிகளுடன் ஆலோசனையில் உள்ளனர்.

தமிழகத்தில் பா.ஜ.க. பூஜ்யம்தான். பா.ஜ.க. எத்தகைய நாடகத்தை நடத்தினாலும் தி.மு.க. கூட்டணியை வீழ்த்த முடியாது. திராவிட மாதிரி ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் சொல்லுங்கள். மத்திய பா.ஜ.க. அரசு தமிழகத்தை தொடர்ந்து வஞ்சிப்பதை நினைவு படுத்துங்கள். கடந்த முறை மிச்சம் வைத்த ஒற்றைத் தொகுதியையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பது என்ற முழு வெற்றியை உறுதி செய்யுங்கள்.

நம்மைத் திசைதிருப்ப அவதூறுகளைப் பரப்புவதில் பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் சளைத்தவையல்ல. தி.மு.கவை மிரட்டிப் பார்க்கும் வகையிலான ஊடகப் பரப்புரை இருக்கும். எதற்கும் தி.மு.க. அஞ்சாது என்பதை களப்பணிகள் மூலம் புரியவைப்போம். பா.ஜ.க. அரசின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் கூட தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளன.

முழுமையான வரவு செலவுத் திட்டம் அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் இண்டியா கூட்டணி அரசு தாக்கல் செய்யும். மாநிலங்களின் நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்படும்."– என்றார்.

# பா.ஜ.க. அரசு சிறுபான்மையின மக்களுக்கு எதிரானது அல்ல என்கிறார் அண்ணாமலை



"பா.ஜ.க. அரசு சிறுபான்மையினருக்கு எதிரான அரசு அல்ல என தமிழக பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

'என் மண், என் மக்கள்' என்ற யாத்திரையை பா.ஜ.க. தொடங்கி பல்வேறு நகரங்களில் நடத்தி வருகிறது. இதில், தமிழக பாஜக மாநிலத்தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டு பொதுமக்களை சந்தித்து பேசி வருகிறார். அதன்படி, திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் சட்டப்பேரவை தொகுதிகளில் நேற்று அவர் சுற்றுப்பயணம் மேற் கொண்டார்.

அங்கு அவர் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

"வாணியம்பாடி பகுதி வளர்ச்சி பெறாமல் உள்ளது. சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்தும், நெக்னாமலைக்கு சாலை வசதி இல்லை. அங்குள்ள மக்கள் அவசர தேவைக்கு டோலி கட்டி வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாறாமல் இருக்க தமிழக ஆட்சியாளர்களே காரணம்.

மத்திய அரசு நிதி ஒதுக்கியும் தமிழக அரசு பாலம் கட்ட இடத்தை தேர்வு செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிறது. தமிழகத்தில் உள்ள கிராமப்புற சாலைகளை சீரமைக்க மத்திய அரசு 5,886 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் எந்த சாலையும் சீரமைக் கப்படவில்லை.

தோல் தொழிற்சாலைகளால் பாலாறு மாசடைந்துள்ளது. இன்னும் 10 ஆண்டுகள் போனால் பாலாறு இருக்காது. தமிழகத்தில் பாலாறு போல 6 நதிகள் மாசு டைந்து காணப் படுகிறது. அதில், முதலிடத்தில் பாலாறு உள்ளதாக மத்திய அரசு ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளது. பாலாற்றை பாதுகாக்க வேண்டும். பாலாறு மட்டும் அல்ல சுற்றுச்சூழல், நீர்நிலை களையும் பாதுகாக்க வேண்டும். அதை பா.ஜ.க. அரசு செய்யும்.

வாணியம்பாடி பகுதியில் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கின்றனர். பா.ஜ.க. அரசு சிறுபான் மையினருக்கு எதிரான அரசு அல்ல. கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முன்பு வேலைவாய்ப்பில் நான் கரை சதவீதமாக இருந்த சிறு பான்மையினர் 2024 இல் 10.5 சதவீதமாக மாறியுள்ளனர். இப்போது சொல்லுங்கள் பா.ஜ.க. அரசு சிறுபான்மையினருக்கு எதிரான அரசா? சிறுபான்மையின மக்களின் வளர்ச்சிக்காக பா.ஜ.க. அரசு என்றும் துணை நிற்கும்." – என்றார்.

# சிரியா, ஈராக் மீதான தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்

## அமெரிக்காவிற்கு ஈராக் பகிரங்க எச்சரிக்கை



அமெரிக்கா, சிரியா மற்றும் ஈராக்கில் நடத்திய தாக்குதல்கள் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஈராக் பிரதமர் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரானிய புரட்சிகர காவல்படை ஆதரவுடன் 85 இற்கும் மேற்பட்ட போராளித் தளங்களை அமெரிக்க போர் விமானங்கள் குறிவைத்து தாக்குதல் நடத்தின.

தாக்குதலில், சிரியாவில் 18 போராளிகள் கொல்லப்பட்டனர்.

ஜோர்டானில் உள்ள அமெரிக்க தளங்கள் முகாம் மீது சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா இந்த தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது.

இந்த நிலையில், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள இலக்குகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு சிரியாவின் வெளிவிவகார அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா முன்னெடுத்துள்ள தாக்குதல் என்பது, அதன் இராணுவப் படைகள் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் மற்றும் பிராந்தியத்தில் மோதலைத் தூண்டுகின்றன என்பது மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது என அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்காவில் வீட்டின் மீது விமானம் விழுந்ததில் பலர் பலி





அமெரிக்காவில் வீட்டின் மீது சிறிய ரக விமானம் விழுந்ததால் பலர் பலியாகி உள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாகாணத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மாகாணத்தில் அமைந்திருக்கும் மொபைல் ஹோம் பார்க்கில் நேற்று முன்தினம் ஒரு சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் இருந்தவர்களும், வீட்டில் இருந்த பலரும் உயிரிழந்துள்ளனர் என தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் மீது விமானம் விழுந்ததில் மூன்று வீடுகள் தீக்கு இரையாகின. இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில், எத்தனை பேர் உயிரிழந்துள்ளார்கள் என்ற விபரம் வெளிவரவில்லை. என்றாலும் விமானம் விழுந்த வீட்டிலும், விபத்தில் சிக்கிய விமானத்திலும் பலர் இருந்தனர் என தெரியவந்துள்ளது.

# பாரிஸ் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் பலர் படுகாயம்




பிரான்ஸின் பாரிஸில் உள்ள ஒரு முக்கிய ரயில் நிலையத்தில் நடத்தப்பட்ட கத்திக்குத்து தாக்குதலில் 3 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் இத்தாலிய ஓட்டுநர் உரிமத்தை வைத்திருந்தார் எனவும் மாலி நாட்டவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அண்மைக்காலமாக பாரிஸில் பல இடங்களில் கத்திக்குத்து தாக்குதல்கள் நடந்துள்ளன.

இதற்கமைய கடந்த டிசம்பரில் ஈபிள் டவர் அருகே சுற்றுலாப் பயணி ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தலைநகர் கரே டு நோர்டில் நடந்த கத்திக்குத்து தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் உள்ள அனைத்து மக்களுமே சுதந்திரக் காற்றை அனுபவிக்க வேண்டும்

## சுதந்திர தினச் செய்தியில் அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு



சுதந்திரக் காற்றை நாட்டினுடைய அனைத்து மக்களுமே அனுபவிக்கும் நிலை வெகு விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் தனது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

அடிமைகளாய் அந்நியர் ஆட்சியில் இருந்த நாம் முதன் முதலாக சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஆரம்பித்த நாளே சுதந்திர தினம்.

அவ்வாறே 1948 மாசி மாதம் நான்காம் நாள் எம் சுதந்திரக் கனவு நனவாகியது.

ஆனால் அந்த சுதந்திரத்தை நாட்டினுடைய வடக்கு – கிழக்கு வாழ் மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைமை இன்றும் தொடர்ந்து வருகிறது.

இந்த முறையும் எம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு – கிழக்கில் சுதந்திர தினத்தை துக்க தினமாக வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களுடைய ஆதங்கம் ஏற்றுக்கொள்ள கூடியது.

தென் பகுதியில் சுதந்திரதினம் விமர்சையாக கொண்டாடப்படும் நிலையில், வடக்கு – கிழக்கு மாகாண மக்கள் கண்ணீருடன் கடந்து செல்கின்றனர்.

எம் மக்கள் இழந்தவை ஏராளம். அவற்றை ஈடு செய்ய முடியாது.

இன, மத, மொழி ஆகிய பேதங்களைக் கடந்து ஆட்சியாளர்கள் நாட்டினுடைய சகல மக்களையும் ஒரே பார்வையில் பார்க்க வேண்டும். அதனைச் செய்யத் தவறின் இனங்களுக்கு இடையிலான விரிசல் நிலை தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

எமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கப் பல வழிகளிலும் போராடிய முன்னோர்களுடைய தியாகங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் இந்த நாளில் நினைவு கூரப்பட வேண்டும்.

நாட்டினைய சகல மக்களும் சமமாக மதிக்கப்படும் பட்சத்தில்தான் சுதந்திரம் கிடைக்கப் போராடிய மூத்தோர்களின் தியாகங்கள் அர்த்தமுள்ளதாக மாறும்.

அந்த நிலைமையை ஏற்படுத்தி இலங்கைத் திருநாட்டைச் சகலரும் இணைந்து அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல திடசங்கற்பம் கொள்ள வேண்டும். – என்றுள்ளது.

# இந்திய நீர்மூழ்கிக் கப்பல் 'கரஞ்ச்' கொழும்பை துறைமுகம் வந்தது





இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ். "கரஞ்ச்" நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த நீர்மூழ்கிக் கப்பலை இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

ஐ.என்.எஸ். கரஞ்ச் நீர்மூழ்கிக் கப்பலானது 53 ஊழியர்களுடன் கப்பலின் கட்டளை தளபதி அருணாப் தலைமையில் வருகை தந்துள்ளது.

கப்பல் வருகையை முன்னிட்டு இடம் பெறவுள்ள நீர்மூழ்கிக் கப்பல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இலங்கை கடற்படையினர் பங்கேற்கவுள்ளனர்.

அத்தோடு, நீர்மூழ்கிக் கப்பல் குழுவினர் இலங்கையின் சில சுற்றுலாத் தலங்களை ஆய்வு செய்ய உள்ளனர்.

ஐ.என்.எஸ். "கரஞ்ச்" நீர்மூழ்கிக் கப்பல் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாளை நாட்டை விட்டு வெளியேறவுள்ளது.














# இலங்கை – தாய்லாந்து இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருள்கள் வர்த்தகம், முதலீடு, சுங்க செயற்பாடுகள் மற்றும் அறிவு சார் சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.


அத்துடன், இலங்கை – தாய்லாந்து விமான சேவைகளுக்கு இடையிலான தாராளமயப்படுத்தப்பட்ட புதிய இருதரப்பு விமான சேவைகள் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.


மேலும் இலங்கையின் இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஜனாதிபதி செயலகத்தில் கைசாத்திடப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.













# நாட்டின் பெருமைகளை உலகறியச் செய்வதற்கு இன்றைய சுதந்திர தினத்தில் உறுதிகொள்வோம்!

- என்.ஹரன். -

எமது தாய் நாட்டின் பெருமையை உலகறிய திடசங்கற்பம் பூண வேண்டும். கடந்த கால யுத்தத்தால் ஐக்கியம் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது மக்கள் மத்தியில் நல்லுறவு வலுப்பெற்று வருகின்றது. யுத்தம் ஓய்ந்த பின்னர் மீண்டும் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த ஒற்றுமையை தொடர்ந்தும் பாதுகாப்பது தமிழ், சிங்கள மொழிகளை பேசும் சகலரதும் கடமையாகும்.

எமது தேசமானது பல்வேறு வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட மிகவும் சிறப்பான நாடாகும். உலக அதிசயங்களாக வியக்கத்தக்க வைக்கும் சிற்பங்களையும் புராதன இடங்களையும் கொண்டுள்ளது. பல்லின மக்களும் ஒன்றுபட்டு விட்டுக் கொடுப்புடன் வாழத் தகுதியான தேசமாக இலங்கை உள்ளது.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் தாங்கள் வாழும் சமூகத்தின் ஒரு கூறாக உள்ளனர். அந்த மக்கள் ஐக்கியமாக இயங்கினாலன்றி எந்த ஒரு சமூகமும் தனித்து முன்னேற்றமடைய முடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இந்தக் கொள்கையை எமது தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்கள் அன்றைய காலத்தில் உணர்ந்து செயற்பட்டிருப்பதை எமது வரலாற்றினூடாக காணக் கூடியதாகவுள்ளது.

சுதந்திரப் போராட்ட காலத்தில் சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம், ரி. பி. ஜாயா, ராசிக் பரீட், டீ. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க ஆகியோர் ஒன்றாக இணைந்தே செயற்பட்டுள்ளனர். இதனையே இன்றைய அரசியல், பொருளாதார கலாசார நிலைகள் உணர்த்தி நிற்கின்றன.

எமது இன ஒற்றுமை சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய விழுமியங்களுள் ஒன்றாகும். இந்த விழுமியங்கள் வளர்ந்து செல்ல வேண்டிய ஒரு கூறாகும். ஆனால் சுதந்திரத்துக்குப் பின்னர் தலைமுறை தலைமுறையாக நாம் காத்து வந்த ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது வேதனை அழிக்கின்றது.

நாம் அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்று 76 ஆண்டுகளாகியுள்ளன. சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற தேசிய வீரர்களை எமது இன்றைய இளம் சமுதாயம் நினைவுபடுத்துவது அவசியமாகும். எமது நாட்டின் பெருமைக்கு உரிய வரலாறு பற்றி நாம் சுதந்திர தினத்திலாவது சற்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

எமது நாடு பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டதாகும். ஆசிய ஜோதியான புத்தபெருமானின் காலடி பட்ட பாக்கியமும் இங்கைக்கு உண்டு. அதேசமயம் பல்வேறு மதங்களையும் எமது நாடு போற்றிப் பாதுகாத்து வந்துள்ளது. இந்து மதத்தை எடுத்து நோக்கினால் கண்ணகி வழிபாடு பரவிய நாடு இலங்கை ஆகும். கண்டி வரலாற்றுப் புகழ்மிக்க எசல பெரகரா இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றையும் கொண்ட பெருமைக்குரியதாகும்.

சோழ மன்னர்கள் இலங்கையை ஆண்ட போது அவர்களுக்கு எதிராகப் போராடி நாட்டை மீட்ட பெருமையும் இந்த நாட்டுக்கு உண்டு. இலங்கை வளம் மிகுந்த நாடென்பதில் சந்தேகமில்லை. அதனாலேயே வெளிநாட்டார் இங்கு வந்து நமது நாட்டைக் கைப்பற்றினர். இலங்கையை அவர்கள் ஆட்சி செய்தது மட்டுமன்றி தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பயிர்களையும் பயிரிட்டனர். நீண்ட காலமாக விவசாய நாடாக திகழ்ந்த எமது நாட்டில் பெருந்தோட்டத் துறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்காரணமாக அக்காலத்தில் வேறு நாடுகளிலிருந்து உணவுத் தேவைக்கான பொருள்களை இறக்குமதி செய்யும் நிலைமை ஏற்பட்டது. இலங்கையில் மட்டுமன்றி ஐரோப்பியர் ஆட்சி செய்த நாடுகளில் எல்லாம் இந்நிலையே ஏற்பட்டது.

1505 ஆம் ஆண்டு கரையோரப் பகுதியை கைப்பற்றிய ஐரோப்பியர்களான போர்த்துக்கேய கத்தோலிக்கர் மதத்தினைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டனர். போர்த்துக்கேயரை விரட்டிய ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தினை பரப்பினர். 1815ல் பிரித்தானியர் மத்திய மலைநாடு முதல் சகல பிரதேசங்களையும் கைப்பற்றி முழு இலங்கையையும் தமதாக்கினர்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரம் பெற்ற காலம் வரை 152 வருடங்கள் பிரித்தானியர் ஆட்சி செய்துள்ளனர். நான்கு நூற்றாண்டு காலப் பகுதிக்கு மேலாக எமது நாடு அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்த நான்கு நூற்றாண்டுகள் எமது மூதாதையர் சுதந்திரத்துக்காகப் போராடியுள்ளனர். இந்தப் போராட்டத்தில் எமது மூதாதையரது வீரப் பண்புகள் வீரச் செயல்கள் வரலாற்றில் புகழ் வாய்ந்தவையாகும். இந்த வீரர்களை நினைவு கூருவது இன்றியமையாததாகும். அவர்கள் தம்மை அர்ப்பணித்தமையால் நாம் இன்று சுதந்திரமாக வாழ்கின்றோம்.

ஸ்ரீலங்கா மாதா என்ற இலங்கையின் தேசிய கீதத்தை 1940 ஆம் ஆண்டு பிரபல கவிஞரான ஆனந்தசமரக்கோன் சிங்கள மொழியில் எழுதினார். இது 1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி நாட்டின் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஆங்கிலேயரிடமிருந்து நாட்டை மீட்பதற்காக இலங்கையர் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி போராடியுள்ளனர். இந்து மதத்தையும், பௌத்த மதத்தையும் காக்க இவர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். ஒன்றாக கைகோர்த்து செயற்பட்டுள்ளனர். இவர்களை நினைவு கூருவதும் எம் அனைவரது கடமையாகும். இன்றைய சுதந்திர தினத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் பேதமின்றி இதனை கருத்தில் கொள்வது முக்கியம்.

இன்று பல்வேறு நாடுகளில் இருந்து உல்லாசப் பிரயாணிகள் எமது நாட்டை நோக்கிப் படையெடுத்த வண்ணமே இருக்கின்றனர். அவர்கள் சுதந்திரமாக உலாவித் திரியும் ஒரே தேசம் எமது சுதந்திர தேசம். இன்றைய சுதந்திரம் என்றும் நிலைக்க உயரிய இலங்கை தேசத்து மக்களாக சிறப்புற வாழ்வோம்.



# இலங்கைத் தமிழரசுக் கட்சி

# பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்!

தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கின்றது. சிவஞானம் சிறீதரன் புதிய தலைவராக தேர்தெடுக்கப்பட்ட பின்னராவது கட்சியை ஒருங்கிணைத்து தீர்க்கமான தலைமைத்துவத்தை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரினால் தேசிய மாநாட்டை நடத்தக்கூட முடியவில்லை. திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றிருக்க வேண்டிய தேசிய மாநாடு, எப்போது எங்கு நடக்கும் என்பது யாருக்கும் தெரியவில்லை. கட்சியின் தேசிய மாநாட்டை முன்னாள் தலைவராக மாவை சேனாதிராஜா ஒத்திவைக்கும் அளவுக்கு, சிறீதரன் ஏன் அனுமதித்தார் என்ற கேள்வி எழுகின்றது.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முனைய மத்தியகுழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்கள் திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை கட்சியின் தலைவர் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது. மத்திய குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாக பதவிகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்த நியமனங்களை, பொதுச் சபை வாய் மொழிமூலமும், பின்னர் வாக்கெடுப்பினூடும் அங்கீகரித்திருக்கின்றது. ஆனால், வாக்கெடுப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், முக்கிய பதவிகளை எதிர்பார்த்து வந்திருந்த சிலர், தங்களுக்கு அந்தப் பதவிகள் கிடைக்கவில்லை என்ற நிலையில், தலைவர் சிறீதரனுக்கும், முன்னாள் தலைவர் மாவை உள்ளிட்டவர்களுக்கு எதிராக கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்தினர். இந்தக் குழப்பத்தினை தலைவராக சிறீதரன் கட்டுப்படுத்தி, அடுத்த நாள் தேசிய மாநாட்டை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அதனைச் செய்ய அவர் தவறிய புள்ளியில், முன்னாள் தலைவரான மாவை, தேசிய மாநாட்டை ஒத்திவைப்பதாக அறிவித்திருக்கின்றார்.

முன்னாள் தலைவர் ஒருவர் தேசிய மாநாட்டை ஒத்திவைக்கும் அதிகாரத்தை தமிழரசுக் கட்சியின் யாப்பு வழங்கவில்லை. தேசிய மாநாட்டுக்கு முதல்நாள் இடம்பெறும் மத்திய குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதுடன், புதிய தலைவராக பொறுப்பேற்கும் நபர், கட்சியின் தலைவராக மாறுகிறார். அப்படித்தான் தமிழரசுக் கட்சியின் யாப்பு வரையறுக்கின்றது. அப்படியான நிலையில், சிறீதரன் இப்போது, தேர்தெடுக்கப்பட்ட தலைவர் என்ற நிலையில் இல்லை. அவர், இப்போது, தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற நிலையில் இருப்பவர்.



புருஜோத்தமன் தங்கமயில்

அதுபோக, தேசிய மாநாட்டை கட்சியின் தலைவர் கூட ஒத்திவைக்கும் அதிகாரம் இல்லாதவர், அப்படி செய்ய வேண்டுமென்றால் மத்திய குழுவைக் கூட்டி அந்த முடிவுக்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆனால், மாவை, கட்சியின் யாப்புக்கும் ஒழுங்குக்கும் அப்பால் நின்று தேசிய மாநாட்டை ஒத்திவைத்திருக்கிறார். அதனை, சிறீதரன் ஆரம்பத்திலேயே சரி செய்திருக்க வேண்டும். மாறாக, சிறீதரன் ஒரு சிலரின் கூச்சல் குழப்பத்துக்குப் பயந்து, தேசிய மாநாட்டை நடத்தாமல் குழப்பம் விளைவித்தவர்களை சமாதானப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்பது, அவரின் தலைமைத்துவத்தை கேள்விக்குள்ளாக்குகின்றது.

தமிழ் மக்களுக்கோ, தமிழ்த் தேசிய அரசியலுக்கோ தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுக் குழப்பங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. ஏனெனில், தனிப்பட்ட தேவை, சுயநலம் சார்ந்து சிலரின் தகிடுதித்தங்களுக்காக ஒட்டுமொத்த மக்களின் அரசியலும் அடகு வைக்கப்பட முடியாது. அதனை, தமிழரசுக் கட்சியினர் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தங்களது கட்சியையே, தொடர்ந்தும் முதன்மைக் கட்சியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழரசுக் கட்சியினருக்கு இருக்கும் இறுமாப்பாகும். அதனால்தான், எந்தவிதப் பொறுப்புணர்வுமின்றி, இவ்வாறான காட்சிகளை அரங்கேற்றுகிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலில் மாற்றுத் தலைமை என்பது, தமிழரசுக் கட்சிக்கு எதிராக பலமாக எழவில்லை. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரமே சில ஆயிரம் வாக்குகளைக் குறிவைத்து இயங்கும் கட்சி. சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி யாழ்ப்பாணத்தில் விழும் உதிரி வாக்குகளில் தப்பிப் பிழைக்கும் கட்சி. ஏனைய முன்னாள் ஆயுத இயக்கக் கட்சிகள், ஒரு சில பிராந்தியங்கள் மற்றும் தனிநபர் அபிமானங்களினால் இன்ன

தொடர்ச்சி▼

# இலங்கைத் தமிழரசுக் கட்சி பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்!

தொடர்ச்சி▲

மும் கட்சியாக தங்களை நிலை நிறுத்திக் கொண் டிருப்பவை. உதாரணமாக, புளொட் இயக்கம், அந்த இயக்கத்தின் மீதான அபிமானத்தினால் நாடாளுமன்ற உறுப்பினரைப் பெறவில்லை. மாறாக, சித்தார்த்தனின் தந்தையும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான தர்மலிங்கம் வலிகாமம் மக்களுக்கு செய்த சேவை மற்றும் கொடையின் நன்றி விசுவாசத் தினால் கிடைக்கும் வாக்குகளினால் தெரிவானவர். அப்படியான நிலையில், வடக்கு கிழக்கு பூராவும்




ஆளுமை செலுத்தும் கட்சியாக தமிழரசுக் கட் சியினருக்கு தலைக்கனம் அதிகரிப்பது என்பது இயல்பானதுதான். ஆனால், அந்தத் தலைக் கனம் என்பது, மிகமோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது. அது, கட்சியை மாத்திரமல்ல, தமிழ் மக்களையும் நட்டாற்றில் விடும் வேலையை பார்க்க வைக்கின்றது.

இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் களினால் நிறையப்போகின்றது. ஒரு கட்சியாக அந்தத் தேர்தல்களை எதிர்கொள்வதற்காக கட்சியை மாத்திரமல்ல மக்களையும் தயார்ப்படுத்த வேண்டும். ஆனால், தமிழரசுக் கட்சியோ, தன்னுடைய கட்சி நிர்வாகக் கட்டமைப்புக்காக நடத்திய தேர்தல் களையும், அதன் முடிவுகளையும் தேசிய மாநாட்டை நடத்தி அடுத்த கட்டத்துக்கு செல்வ தற்கு தயாராக இல்லை. இந்தக் குழப்பம், கட்சி யினரை மாத்திரமல்ல ஆதரவாளர்களையும் சோர்வ டைய வைக்கும். மாவை காலத்து தமிழரசுக் கட்சி என்பது, தோல்வியின் முகமாக மாறி வந்தது. அந்தத் தோல்வியின் கட்டங்களில் இருந்து வெற்றியின் பக்கத்திற்கு கட்சியை அழைத்துச் சென்றாக வேண்டும். அது, தலைவர் என்ற பொறுப்பில் இருக்கும் ஒருவரினால் மாத்திரம் முடியாது. கட்சியின் நிர்வாகம், பொதுக்குழு உறுப்பினர்கள் தொடங்கி, அனைவரும் மனது வைத்தால்தால் சாத்தியமாகும். அதற்கு, அந்தக் கட்சியினர் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும். அப்படியான கட்டத்தை நோக்கி நகரவில்லை என்றால், பொதுத் தேர்தலில் தென் இலங்கைக் கட்சிகளும், அந்தக் கட்சிகளின் உதிரிகளும் வடக்கு கிழக்கில் வாக்கு அறுவடையைச் செய்யும். அது, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் எண் ணிக்கையை நாடாளுமன்றத்துக்குள் குறைக்கும்.

மக்களைத் தீர்க்கமான அரசியலின் பக்கம் ஒருங்கிணைப்பது என்பது, தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியாக தமிழரசு செய்ய வேண்டி யது. அதனைச் செய்யாது, பண முதலைகள், முகவர்களை கட்சியின் தீர்மானங்களில் தாக்கம் செலுத்தும் அளவுக்கு அனுமதிக்கும் சூழலை உருவாக்குவது என்பது, கட்சியின் மூல வேரையே அறுத்துவிடும். இப்படியான காட்சிகள் உலகம் பூராவும் நிகழ்ந்திருக்கின்றன. அப்படியான காட்சியை தமிழரசுக் கட்சியும் பிரதிபலித்து, அழிந்து விடுமோ என்கிற அச்சம் மக்களிடம் உண்டு. தந்தை செல்வா மிக ஜனநாயக தன்மையோடு தோற்றுவித்த கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டுக்கொடுத்த கட்சி என்கிற அடையாளங்களோடு தமிழரசுக் கட்சி இன்னமும் இருக்கின்றது. ஆனால், அதற்குள் அரசியல் அறமற்ற தரப்புக்களின் ஊடுருவல் என்பது மிகவும் ஆபத்தானது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர் பிலான மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை வெளிவர இருக்கின்றது. இந்த அறிக்கையில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்படப் போகின்றன என்பது தொடர்பில் இப்போது தமிழ்த் தேசிய அரசியல் அரங்கு கவனிப்பதில்லை. கிட்டத்தட்ட தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கை விடயம், சர்வதேச ரீதியில் கையாளப் படும் ஓர் இடமாக இன்னமும் இருப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மாத் திரமே. அங்குதான், இலங்கை தொடர்பிலான



தீர்மானம் இன்னமும் நிலுவையில் இருக்கின்றது. அந்தத் தீர்மானத்தை நீடிப்பது தொடர்பிலான வாக்கெடுப்பு, செப்டம்பரில் நடைபெறும் அமர்வில் இடம்பெறும். அதற்கான சூழலை தக்க வேண் டிய பொறுப்பு தமிழரசுக் கட்சிக்கு இருக்கின்றது. இலங்கை தொடர்பிலான தீர்மானம் வாக்கெடுப் புக்கு வருவது என்பதே மிகப்பெரிய இராஜதந்- திர நகர்வுகளோடு செய்யப்பட வேண்டியிருக்கி- ன்றது. இன்றைய இஸ்ரேல் – பலஸ்தீன மோதலி

தொடர்ச்சி▼

# இலங்கைத் தமிழரசுக் கட்சி

# பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்!

தொடர்ச்சி▲

னால் உலக இராஜதந்திர ஒழுங்கு என்பது மாற்ற மடைந்திருக்கின்றது. அப்படியான நிலையில், இலங்கை மீதான தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும், அதற்கு ஆதரவளிக்குமாறு நாடுகளைக் கோருவதும் அவ்வளவு இலகுவான ஒன்றல்ல. அதற்கான செயற்திட்டங்களை தமிழ்த் தரப்பு மும்முரமாக முன்னெடுக்க வேண்டும். இல்லையென்றால், இலங்கை சர்வதேச ரீதியில் எதிர்கொண்டிருந்த அந்த ஓர் சிக்கலில் இருந்தும் வெளியேறிவிடும். முன்னைய தீர்மானத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை தொடர்பான பொறுப்புகூறல் செயற்றிட்டம் தற்போது இயங்கி வருகின்றது. அதுவும் இல்லாமல் போய்விடும். அதன்பின்னர், சர்வதேச விசாரணை, சர்வதேச எப்பட்ட இராஜதந்திர முயற்சிகளை இனி யார் தொடரப்போகிறார்கள் அல்லது புதிய திட்டங்களை செயற்படுத்தப்போகிறார்களோ என்பது தொடர்பில் எவரிடத்திலும் தெளிவில்லை. முதலில் அந்தத் தெளிவை மக்களுக்கும் இராஜதந்திர வட்டாரங்களிடத்திலும் தமிழரசுக் கட்சி வழங்க வேண்டும். அதற்கு கட்சியை ஒரு கட்டமைப்பிற்குள் தேவையற்ற குழப்பங்கள் இன்றி பேணியாக வேண்டும். அதன்மூலம் பொறுப்புக்களை பகிர்ந்தளித்து செயற்பாட்டு வேகத்தை அதிகரிக்க வேண்டும். அவை குறித்து சிந்திக்காது, தொடர்ந்தும் ஊடகங்களும் மக்களும் தமிழரசுக் கட்சியின் குழப்பங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தோரணையில் அந்தக் கட்சியின் தலைவரும், முக்கியஸ்தர்களும் செயற்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.




தீர்ப்பாயம் என்று அறிக்கைகளில் ஆர்வமூட்டிக் கொண்டு மாத்திரம் இருக்க வேண்டியிருக்கும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களினால் முழுமையான நீதி கிடைத்துவிடும் என்றில்லை. ஆனால், அதனையொரு இராஜதந்திர கருவியாக தமிழ்த் தரப்பு தொடர்ந்தும் கையாள வேண்டும். இல்லையென்றால், இன்றிருக்கும் கையறு நிலையைவிட மிகமோசமான கட்டத்தை சர்வதேச ரீதியில் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த விடயங்கள் குறித்த அக்கறை தமிழரசுக் கட்சியின் தலைவருக்கும் முக்கியஸ்தர்களுக்கும் இருப்பது மாதிரித் தெரியவில்லை. அல்லது, வழக்கமாக இறுதிக் கட்டத்தில் ஒப்புக்கு கடிதங்களை எழுதியும் அறிக்கைகளையும் வெளியிட்டு ஊடகங்களை நிரப்பலாம் என்று காத்திருக்கிறார்களோ தெரியவில்லை. இப்போது, தமிழரசுக் கட்சி சார்பில் யார் யாரெல்லாம், சர்வதேச விடயங்களைக் கையாள்கிறார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது. ஏற்கனவே மேற்கொள்

ஒரு ஜனநாயகக் கட்சியாக, கட்சியின் யாப்பை உள்வாங்கி அதன் பிரகாரம் செயற்பட வேண்டியது அவசியமானது. அதனை தமிழரசுக் கட்சி நிராகரிக்கும் புள்ளியில்தான், தேவையற்ற குழப்பங்கள் நீடிக்கின்றன. அல்லது, குழப்பவாதிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் கட்சியின் மீதான சண்டித்தனத்தை செய்கிறார்கள். மத்திய குழுவும், பொதுக்குழுவும் அங்கீகரித்த புதிய நிர்வாக சபையை செயற்படுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். அதனைவிடுத்து, தேவையற்ற அழுத்தங்களுக்கு தலைவராக சிறீதரன் அடிபணிவது அவரது தலைமைத்துவத்தை அர்த்தமற்றதாக்கிவிடும். தமிழ்த் தேசிய அரசியலில் இனிவரும் காலங்களில் செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே இருக்கின்றன. அதனை கால எல்லைகளை வரையறுத்து செய்ய வேண்டும். அதனைவிடுத்து, இவ்வாறான குழப்பகரமான நிலையற்ற தன்மையை பேணுதல் என்பது தமிழ் மக்களின் பேரழிவுக்கு மீண்டும் வித்திடும்.



# இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய 51 பேருக்கு பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியபிரமாணம்

## வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

(வசந்தன்)

வடக்கு – கிழக்கின் ஏழு மாவட்டங்களில் வசிக்கும் 51 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியப்பிரமான நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வந்த நிலையில் அங்கு பிறந்த பிள்ளைகளுடன் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் நாடு திரும்பிய பலர் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற முடியாது பல்வேறு நெருக்கடிக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பர் சிலோன் நிறுவனத்தின் பங்களிப்புடன் மாவட்ட செயலகம் மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் என்பன இணைந்து நடமாடும் வேலைத் திட்டமாக துரிதமாக பிறப்பு சான்றிதழை வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய வடக்கு – கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 51 பேருக்கு பிரஜாவுரிமை மற்றும் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. அதன் ஒரு கட்டமாக இலங்கை பிரஜை என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், குடிவரவு, குடியகல்வு திணைக்கள பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஈ.எச்.நயனா பிரசங்க, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் டினேஸ், குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், ஒப்பர் சிலோன் அமைப்பின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.













# மோ. சைக்கிள் ரேஸ் ஓட்டம்
# பெரும் விபத்தில் முடிந்தது!



(பாறுக் ஷிஹான்)

மோட்டார் சைக்கிளில் ரேஸ் ஓடிய இளைஞர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து சுவரில் மோதுண்டு படுகாயமடைந்தனர்.

இவ்வாறு காயமடைந்த இரு இளைஞர்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நான்கு இளைஞர்கள் ரேஸ் ஓட்டம் ஒன்றில் ஈடுபட்டபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நிந்தவூர் வைத்தியசாலை வீதியிலிருந்து பிரதான மெயின் வீதியை நோக்கி நான்கு இளைஞர்கள் இரு மோட்டார் சைக்கிள் மூலம் ரேஸ் ஓடிய வேளை வேகக் கட்டுப் பாட்டினை இழந்தமையினால் ஜும்ஆ பள்ளிவாசல் சுவர் பகுதியில் மோதுண்டு இரு இளைஞர்கள் பலத்த காயங்களுடன் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இரண்டு கிலோ கஞ்சாவுடன் பூநகரியில் ஒருவர் சிக்கினார்



(த.சுபேசன்)

பூநகரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளிக்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 2கிலோ 100கிராம் கஞ்சாவுடன் 40 வயது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்வதற்கு முற்பட்ட வேளையில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.




# தமிழரசுடன் பொதுச்சின்னத்தில் இணைத்து பயணிக்கத் தயார்!

## ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அறிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

**தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

**மன்னாரில் உள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில் -**

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே நாங்கள் தமிழரசுக்கட்சியின் தனிச் சின்னத்தில் நாங்கள் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் வெளியில் சென்றதன் காரணமாக –,நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டும் என்ற காரணத்தினால் – நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனின் கூற்றை நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணி திரள்வோம்.

பொதுச் சின்னத்திற்கு வீட்டுச் சின்னம் கூட மாற்றப்பட்டால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

தனிப்பட்ட கட்சிக்குள் கூட்டாக இருப்பது நன்றாக அமையாது.

பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்.– என அவர் மேலும் தெரிவித்தார்.



# இன்றைய ராசி பலன்கள் - 04.02.2024




கடின உழைப்பின் மூலம் தான் வெற்றி கிடைக்கும். இன்று நீங்கள் சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்வீர்கள்.அதற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு பணியைப் பொறுத்தவரை பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிப்பீர்கள். நட்புடன் சகஜமாகப் பழகுவீர்கள்.

இன்று பணம் எளிதாகக் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருப்பதால் நல்ல பண வரவு கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள்.

இன்று உங்கள் செயல்களை திறம்பட ஆற்றும் அளவிற்கு உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று வெற்றி பெறுவதற்கு உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். மனதில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்க உணர்ச்சிவசப்படுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று உங்களின் கவனக் குறைவு காரணமாக தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளை கவனமுடன் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள்துணையுடன் அமைதியற்ற நிலையில் இருப்பீர்கள். இருவரும் மனம்திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

பணப்புழக்கம் மிதமாக இருக்கும். பண வரவு காணப்பட்டாலும் குடும்பத்திற்காக சில அவசர செலவுகளைச் செய்ய நேரும்.

உங்கள் தாயின் ஆரோக்கியம் கவலையை அளிக்கும். அவரின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




ஆன்மீக ஈடுபாடு இன்று நல்ல பலனளிக்கும். நம்பிக்கையான மனநிலை இருந்தால் சரியான பாதையில் செல்ல இயலும்.

உங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் அல்லது பாராட்டு கிடைப்பது அரிது. உங்கள் திறமைகளைப் பயன்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய சூழ்நிலையை தவிர்த்தல் நல்லது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




கடகம் இன்று வெற்றியைக் கொண்டாடுவீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியமும் உறுதியும் உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்களின் கடின உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

இன்று அதிக பணம் காணப்படும். வெளி நாட்டிலிருந்து சிறிது பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய தினத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் திருப்தி கிடைக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். தவறுகளை தவிர்க்க கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியான முறையில் பழக வேண்டும். நடக்கும் சம்பவங்களை அதன் போக்கில் ஏற்றுக் கொள்ள முயலுங்கள்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தை சிறந்த முறையில் கையாள வேண்டும். உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்தால் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். உங்களுக்கு பிடித்தமானவர்களுடன் உரையாடும் போது கவனம் தேவை.

பணி நிமித்தமாக பயணம் மேற்கொள்ள நேரும். பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்கவும்.

இன்று பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தொடர்ந்து உடற்பயிற்சியும் தியானமும் மேற்கொள்வது சிறந்தது.




இன்று சவாலான நாள். சாதகமான பலன்களைக் காண இன்று நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். என்றாலும் அமைதியற்ற உணர்வு உங்கள் வளர்ச்சியை பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகளை சிறந்த முறையில் கையாள திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அவருடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்களின் மதிப்பு வாய்ந்த பொருட்களை இழக்க நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று கால் வலி பாதிப்பு காணப்படலாம்.




சாதகமான நாள் உங்களுக்காக காத்திருக்கின்றது. நல்ல நம்பிக்கை, ஆற்றல் மற்றும் உறுதி உங்கள் கண்ணோட்டத்தை வரையறுக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

இன்று பணிகளை ஆற்றுவது எளிதாக இருக்கும். கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல விதமாக தொடர்பு கொண்டிருபீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக காணப்படும். நீங்கள் புதிய முதலீடுகளின் மூலம் உங்கள் நிதிநிலைமையை மேம்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.02.2024




இன்று நீங்கள் புதிய நண்பர் களையும் தொடர்புகளையும் உருவாக் கிக்கொள்வீர்கள். எந்த விஷயத்தை யும் லேசாகவும் எளிதாகவும் எடுத்துக் கொள்வது உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இணைந்து செயலாற்றுவீர்கள். நண்பரின் இல்லத்திற்கு செல்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். பணத்தை சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன் றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங் கள்.




இன்று சுமாரான பலன்களே கிடைக் கும். உங்கள் செயலில் வேகத்தை தவிர்க்க வேண்டும். இன்றுஅதிர்ஷ்டம் காணப்படாது. நீங்கள் முயற்சியைத் தான் சார்ந்திருக்க வேண்டும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. பணிகளைக் கையாளும் போது தவறுகள் நேராமல் இருக்க எச்சரிக்கை தேவை.

உங்கள் துணையுடன் இன்று சூடான விவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

சளி அல்லது காய்ச்சல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று பொறுமையை கடைபிடிக்க வேண்டும். உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமை அதிகமாக இருக்கும். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். தவறுகளை தவிர்த்தல் நல்லது.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படு வீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப் படும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி பாதிப்பு ஏற்படலாம். தியானம் மேற் கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று மனவலிமையுடன் இருப்பது மிகவும் அவசியம். உங்கள செயல்களை மேற்கொள்ளும்போது தடைகளை சந்திக்க நேரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.நேர் மறை எண்ணங்களைக் கொள்ளுங்கள்.

பணிகள் அதிகமாக காணப்படும். பலன்கள் உங்க ளுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

மகிழ்ச்சியுடன் இருக்க இன்று உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. தேவை யற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினை காரணமாக சில அசௌகரியங்கள் ஏற்படலாம்.








# தாய்லாந்துப் பிரதமர் உள்ளிட்ட குழுவினரை வரவேற்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இலங்கை வந்துள்ள தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் மற்றும் அவரது குழுவினரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றார்.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று பிற்பகல் இலங்கையை வந்தடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகைதந்துள்ள அவர், இன்று இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்கின்றார்.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின், அந்த நாட்டு பிரதி பிரதமர் பூம்தாம் வெச்சயச்சாய் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருடன் வருகை தந்துள்ள நிலையில், அவர்களுக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன சிறப்பு வரவேற்பளித்தார்.













# சுபீட்சமான இலங்கைக்காக இணைந்து செயலாற்றுவோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"சுபீட்சமான இலங்கைக்காக உலக நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுவோம். தாய்லாந்து உள்ளிட்ட கிழக்காசிய நாடுகள், ஆசியான் வலய நாடுகள் வசமாக காணப்படும் எதிர்காலத்துக்கான முன்னோடி பொருளாதார வலுவைக் கொண்டிருக்கும் தரப்புகளுடன் இருதரப்பு வர்த்தகத்தை பலப்படுத்திகொள்ள இலங்கை எதிர்பார்க்கிறது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசினுடனான இருதரப்பு சந்திப்பின் பின்னர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இரு தலைவர்களினதும் பங்கேற்புடன் இடம்பெற்ற இணை ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், தாய்லாந்து பிரதமர், ஜனாதிபதி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்திலும் எண்ணங்களைப் பதிவிட்டார்.

இணை ஊடகவியலாளர் மாநாட்டில் தாய்லாந்து பிரதமர் ஷரேதா தவீசின் கருத்து தெரிவிக்கையில், 2025 – 2027 வரையிலான மனித உரிமைகள் பேரவையின் உறுப்புரிமைக்கான ஆசியான் பிராந்திய அமைப்பின் பிரதித்துவமாக தாய்லாந்து செயற்படுகிறது என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்த மாநாட்டின் உறவுகளை மேம்படுத்துவதில் தாய்லாந்து மத்தியஸ்த அந்தஸ்த்தை கொண்டுள்ளது எனவும் தாய்லாந்தும் இலங்கையும் இரு நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இணைந்து செயல்பட முடியும் என்றும் தாய்லாந்து பிரதமர் வலியுறுத்தினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

"இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை விரைவுபடுத்துவதே தாய்லாந்து பிரதமரின் விஜயத்தின் முதன்மை நோக்கமாகும். இதுவரை நமது இரு நாடுகளும் கவனம் செலுத்தாத விடயங்களின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இலங்கை ஆசியான் நாடொன்றுடன் கைசாத்திடும் இரண்டாவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் இரு நாட்டு அரசுகளும் அர்ப்பணிப்புடனும் திறம்படவும் செயல்பட்டன. இரு நாடுகளினதும் பொருளாதார ஒத்துழைப்பின் மைல்கல்லாகவும் இதனை கூறலாம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தும் வகையில் விமான சேவை ஒப்பந்தமும் புதுப்பிக்கப்பட்டது. இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது. இந்த இரண்டு ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளையும் மேம்படுத்த உதவும்.

2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், இலங்கை தற்போது பொருளாதார ஸ்திரத்தன்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கான முக்கியமான உபாய மார்க்கமாக கிழக்காசிய மற்றும் ஆசியான் வலயத்தினால் எதிர்கால முன்னேற்றத்தை உறுதி செய்யக்கூடிய தரப்புக்களுடன் இருதரப்பு வர்த்தகங்களைப் பலப்படுத்து ஏனைய பங்குதாரர்களுடன் தொடர்புபட்டு செயற்படுவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம். அதேநேரம் எங்கள் மக்களின் செழிப்பை உறுதி செய்வதே எங்கள் முதன்மை நோக்கமாகும்.

இலங்கை தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தத் தொடங்கியுள்ள நிலையில், அதன் மீட்சி மற்றும் வளர்ச்சியில் சர்வதேச நம்பிக்கையைக் கட்டியெழுப்பியுள்ளது. அதற்கிணங்க, இலங்கை பொருளாதார மாற்றம் மற்றும் ஆசியாவுடனான ஒருங்கிணைப்பின் மிக முக்கியமான பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன், இதற்காக தாய்லாந்தின் ஆதரவை நாம் எதிர்பார்க்கிறோம்." – என்றார்.

இதன்போது தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உரையாற்றுகையில்,

"இன்று பிற்பகல், ஜனாதிபதியும் நானும் மிகவும் பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்டோம். அங்கு பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கடந்துரையாடினோம். நமது இரு நாடுகளுக்கிடையிலான வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகளை, குறிப்பாக தேரவாத பௌத்தத்தின் அடிப்படையில் நமது வலுவான மற்றும் நெருக்கமான உறவுகளை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.

அத்துடன், எமது இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி, எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகள் கணிசமானளவு வளர்ச்சியடையும் என நான் நம்புகிறேன்.

இலங்கை – தாய்லாந்து வர்த்தக ஒன்றுகூடல் இரு தரப்பினருக்கும் பல பாரிய வர்த்தக வாய்ப்புகளை திறந்து வைக்கும். இந்த நிலையில், இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு தனியார் துறையையும் ஊக்குவிக்கின்றோம்.

மேலும், இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான கலாச்சார மற்றும் பௌத்த சுற்றுலாவை மேம்படுத்துவது எமது கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்ட மற்றுமொரு முக்கிய விடயமாகும்.

விசா இல்லாமல் இரு நாடுகளுக்கும் இடையே பயணம் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், இரு நாட்டு மக்களிடையே உறவுகளை மேம்படுத்துவது மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பிறகு பொருளாதார ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும்.

விசா இல்லாமல் இரு நாடுகளுக்கும் இடையே பயணம் செய்வது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது குறித்தும் இரு தரப்பிலும் கலந்தாலோசிக்கப்படுகிறது." – என்றார்.



# புதிய நாட்டை உருவாக்குவோம்!: இன்று சுதந்திர தினம் அனுஷ்டிப்பு

## அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

76 ஆவது சுதந்திர தின விழாவை இன்று காலி முகத்திடலில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

"புதிய நாட்டை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராக தாய்லாந்து பிரதமர் கலந்துகொள்ளவுள்ளார்.

இம்முறை சுதந்திர தின விழாவை பல்வேறு கலை நிகழ்வுகள் அலங்கரிக்கவுள்ளன. முப்படைகளின் அணிவகுப்புகளும் கோலாகலமாக இடம்பெறவுள்ளன.

மரியாதை அணிவகுப்பிப்பில் இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 3 ஆயிரத்து 461 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆயுதம் தாங்கிய வாகனங்கள் உள்ளிட்ட 69 வாகனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

விமானப்படையை பிரதிநிதித்துவப்படுத்தி 19 விமானங்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் கலந்துகொள்ளவுள்ளன.

7 ஹெலிக்கொப்டர்கள், 16 ரக 5 விமானங்கள், 3 ஜெட் விமானங்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இலங்கை கடற்படையின் 1009 உறுப்பினர்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் இணையவுள்ளனர்.



# சுதந்திர தின நிகழ்வுகளுக்காக விசேட போக்குவரத்து ஒழுங்கு!

காலி முகத்திடல் பகுதியை அண்மித்த பல வீதிகள் நேற்று பிற்பகல் 2 மணி முதல் மூடப்பட்டுள்ளன என பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

76 ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில், அதுவரை மேற்படி வீதிகள் மூடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு சாரதிகளுக்கு அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்லும் மக்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுதந்திர தின விழாவை யொட்டி போக்குவரத்துக் கடமைகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, இன்று காலை 05 மணி முதல் காலை 09 மணி வரை கரையோர ரயில் மார்க்கத்தில் இயங்கும் ரயில்கள் கொள்ளுப்பிட்டி மற்றும் பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட மாட்டாதென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி முகத்திடலில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுவதை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# தனித்துவம் மிக்க தேசிய கொடி!

**- நடராஜன் மிருணாளினி -**

சுதந்திர தினமான இன்று எமது தேசிய கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்துக்கு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத்தனத்தில் இருந்து எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்தது. அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசியக் கொடியை, தம் வீடுகளிலும், வேலைத் தலங்களிலும், பொது இடங்களிலும், பாடசாலைகளிலும் பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று சுதந்திர தினத்தில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கம்பீரமாக தேசியக் கொடி பறப்பதை அவதானிக்க முடிகின்றது ஒரு நாட்டில் பெருமையைப் பறைசாற்றும் சின்னமாகத் தேசியக் கொடி மதித்துக் கௌரவிக்கப்படுகிறது.

தேசியக் கொடியை ஏற்றும் போதும் அதனை கம்பத்திலிருந்து இறக்கும் போதும் ஒரு நாட்டில் தலைவருக்கு கொடுக்கப்படும் அதே அளவு மரியாதை தேசிய கொடிக்குக் கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின் போது தேசியக் கொடி சகல அரச கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது.

பலவகையான கொடிகளை ஒரு இடத்தில் பறக்கவிடும் போது அவற்றை விட சற்று உயரத்தில் தேசியக் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

1972 ஆம் ஆண்டில் இலங்கை ஒரு ஜனநாயக குடியரசாக மாற்றமடைந்த போதும் 1978 ஆம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட போதும் எமது நாட்டின் தேசியக் கொடியில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது .

ஐக்கிய இராச்சியத்திடமிருந்து இலங்கை விடுதலை அடையும் வேளையில் இலங்கைக்கு நாட்டு கொடிக்கான தேவை ஏற்பட்டது. அதுவரை பிரித்தானிய ஒன்றியக் கொடியே இலங்கை கொடியாக இருந்து வந்தது. விடுதலையின் போது இலங்கையின் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கனின் சிவப்பு நிறப் பிண்ணணியில் மஞ்சள்நிற போர்வாளேந்திய சிங்கக்கொடியானது சுதந்திர இலங்கையை குறிக்கும் சிறந்த கொடியாக அமையும் என்று தெரிவு செய்தார்.

எனினும் அக் கொடியில் தங்கள் இனத்துவங்களை பிரதிபலிக்கும் அடையாளங்கள் ஏற்படுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

சில நாள்களின் பின் தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஜே.எல். கொத்தலாவல, டி.பி. ஜாயா, எல்.ஏ. ராஜபக்ஷ, எஸ். நடேசன், ஜே. ஆர். ஜயவர்தன என்போர் அடங்கிய நாடாளுமன்றக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய தேசிய கொடியில் சமஅளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டது.

இலங்கையின் தேசியக்கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும் பகுதியை அடக்கியுள்ள மற்றப்பகுதி கருஞ் சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது.

செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லீம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரசிலைகள் கொடியின் நான்கு மூலைகளிலும் இணைக்கப்பட்டது. இக்கொடியே தற்போது இலங்கையில்

தொடர்ச்சி ▼

# தனித்துவம் மிக்க தேசிய கொடி!

தொடர்ச்சி ▲

பயன்பாட்டில் உள்ளது.

இலங்கையின் இன்றைய தேசியக் கொடி பின்வரும் சிறப்பம்சங்களை உடையதாகும்.

சிங்கம் – உடல் வலிமையும், மனோ வலிமையும் மிக்கது. தனக்குப் பொருத்தமற்றதைச் செய்யாது , வாள்– அநீதிக்கு எதிரான போராட்டம். அரச இலைகள் நான்கு மெத்தா–ஒற்றுமையை பலப்படுத்தல், கருணா–துன்பத்திலிருந்து மீட்சி பெறல், முதிதா – பிறரிடம் அனுதாபம் காட்டுதல்.

உபேக்காஎளிமையும்சகிப்புத்தன்மையும். சிவப்பு நிறம் – சமத்துவம் மிக்க சமுதாய அமைப்பஒ உருவாக்குதல்.மஞ்சள் நிறம் – அறிவு, சமாதானம், அகிம்சை, சத்தியம்,தர்மம் என்பவற்றை வெளிப்படுத்தல். செம்மஞ்சள் நிறம் – சிறுபான்மைத் தமிழர். பச்சை நிறம் – சிறுபான்மை முஸ்லிம்கள் போன்ற சிறப்பம்சங்களை உடையதாகும்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதியன்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அன்று இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கவின் கொடி ஏற்றப்பட்டு பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டமை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

இத்தனை சிறப்புவாய்ந்த தேசியக் கொடியானது ஒரு தேசியத் தலைவரின் மரணம் அல்லது இயற்கை அனர்த்தத்தால் நாட்டில் ஏற்படும் மனித அழிவின் போது தேசத்தின் சோகத்தை காண்பிக்கும் முகமாக அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின் போது தேசியக் கொடியை பயன்படுத்திய பின்னர் அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி நெறியாக மடித்து வைக்க வேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விட வேண்டும்.

தேசிய கொடியை தலைகீழாக கவனக் குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை சட்டப்படி ஒரு தண்டனைக்குரிய சட்டமாக கருதப்படுகிறது.

தேசியக் கொடியை பறக்கவிடும் போது அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசியக் கொடியை கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

அது போல் தேசியக் கொடிகளை அச்சிடும் போது அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றி விடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசியக் கொடியை பாதைகளின் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும்.

1951 ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கத்தின் கொடியில் சில திருத்தங்களை மேற்கொண்டு அதில் சிறுபான்மை சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய வகையில் சில வர்ணங்கள் எங்கள் தேசியக் கொடியில் சேர்க்கப்பட்டுள்ளன. சிலர் தேசியக் கொடியை பொலிதீனில் அச்சிட்டு தேசிய வைபவங்களின் போது தெருத்தெருவாக கட்டிவிடுவதுண்டு. அந்த வைபவம் முடிவடைந்த பின்னர் ஒருவருமே அவற்றை அகற்றி விட வேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இறுதியில் கொடிகள் வீதியில் அநாதரவாக விழுந்துவிடும் போது அவற்றை பலரும் பொருட்படுத்தாமல் மிதித்து செல்கின்ற வேதனைக்குரிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஆகவே, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தேசிய கொடியை அவமதிக்கக்கூடிய வகையில் அவற்றை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளின் போது இலங்கையின் தேசியக் கொடி மாத்திரமின்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தேசியக் கொடிகள் தரக்குறைவான முறையில் பயன்படுத்துவதுண்டு. சில பெண்கள் தேசியக் கொடியை பயன்படுத்தி ஆடைகளை தைத்து விடுவதுண்டு. வேறு சிலர் ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் ஆரவாரம் செய்யும் போது தேசியக் கொடியை மடியில் கட்டிக்கொண்டு ஆடுவதும் அப்பொழுது அந்தக் கொடி நழுவி கீழே விழும் சம்பவங்கள் நடைபெறுவதும் இப்போது அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இனிமேல் நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசியக் கொடியை கௌரவிக்கக்கூடிய நற்பண்புகளை இப்போது பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தேசிய கீதம் இசைக்கப்படும் போது நாம் அனைவரும் எங்களை அறியாமலேயே எழுந்து நின்று சிரம் தாழ்த்தி அதற்கு மாரியாதை செலுத்துவதைப் போன்று தேசிய கொடி கட்டடங்களில் ஆடம்பரமாக பறந்து கொண்டிருக்கும் போது அதனை அண்ணார்ந்து பார்த்து சிரம் தாழ்த்தி கௌரவித்தல் அவசியமாகும்.

சுதந்திரத்தினமான இன்று நாட்டிலுள்ள எல்லா வீடுகளிலும் தேசியக் கொடியை பறக்கவிடுதல் அவசியமாகும். இதன்மூலமே இந் நாட்டு மக்கள் தற்போது அவர்களுக்கு கிடைத்திருக்கும் சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறார்கள் என்பதையும் எங்கள் நாட்டில் வலுவடைந்து வரும் தேசிய ஐக்கியத்தையும் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும்.



# தியாகி திருமலை நடராஜனும், கரிநாளான சுதந்திர தினமும்!

- நவீனன் -

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் வடக்கு – கிழக்கில் கறுப்பு நாளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில், 04.02.1957 அன்று திருமலையில் கறுப்புகொடி ஏற்றியவேளை சிங்கள படையால் தியாகி திருமலை நடராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதையும் நினைவு கூறவேண்டும்.

**பெப்ரவரி 4 - கறுப்பு நாள்**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் முழுவதும் 'கறுப்பு தினம்' ஆகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 4 ஆம் திகதி கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தப்படுவ தாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள் சங்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஆகியன அறிவித்துள் ளன.

தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. பூர்வீக இருப்பு கேள்விக்கு உரியாகியுள்ளது. அச் சுறுத்தல்கள் இன்னமும் தொடர்கின்றன. ஆட்சி களும், ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனி னும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்பது இன்றுவரை முன்னேற்றகரமான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக் கான முன்னேற்றகரமான வேலைத் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படாமல், அது வெறும் பேசு



திருமலைத் தியாகி
நடராஜன்

பொருளாக மாத்திரமே இருக்கின்றது. பெப்ரவரி 04 வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப்படுத்து கின்றோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளனர்.

அரசு பல்வேறு புதிய சட்டங்கள் ஊடாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல்



ஆக்கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், நிலங்களை கைப்பற்றி விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளாகள் என இவை தொடர்கின்றன.

ஆகவே தமிழர்களின் தீர்வு எட்டப்படும்வரை போராடியே ஆகவேண்டும் என்பதே வரலாற்று உண்மை. அரசியல் தீர்வு கிடைக்கும்வரை தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என மாண வர் ஒன்றிய தலைவர் மேலும் வலியுறுத்தியுள்ளது.

**திருமலையில கறுப்புகொடி**

திருகோணமலையில் 1957 ஆம் ஆண்டில் தமிழ் பேசும் மக்கள் பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினத் தைத் துக்க தினமாக அனுஸ்டிக்க முடிவு செய்தார்கள். அத்துடன் 1957 இல் இலங்கை சுதந்திர நாளைக் கரிநாளாக தமிழரசுக் கட்சியும் அறிவித்தது.

திருமலையில் 04.02.1957 அன்று கறுப்புகொடி ஏற்றியவேளை சிங்கள படையால் நடராஜன் இந்த நாளிலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

தியாகி நடராஜன் ஆயுதம் தூக்கிப் போராட வில்லை. ஆனாலும் சுட்டுக் கொல்லப்பட்டார். அகிம்சை போராட்டம் வன்முறை மூலம் அடக்கப் பட்டதாலேயே தமிழர்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

பெப்ரவரி 4 ஆம் திகதி காலையில் பல்லாயி ரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் கறுப்புக் கொடி களைப் பிடித்துக் கொண்டும் கறுப்புச் சின்னங்களை அணிந்து கொண்டும் திருகோணமலை மடத்தடி சந்தியிலிருந்து நகரசபை காரியாலயத்தை நாடி அமைதியுடன் ஊர்வலமாகச் சென்றனர்.

இவ்வூர்வலத்தைத் திருமலை பிரதிநிதி என்.ஆர். இராஜவரோதயம், ஊர்காவற்றுறை பிரதிநிதி வி.ஏ. கந்தையா, கப்டன் ஏ.ஸி.கனகசிங்கம், டாக்டர் துரை நாயகம் ஆகியோர் முன்னின்று நடத்தினர் என சுதந்திரன் பத்திரிகை 10.02.1957இல் தகவலை வெளியிட்டது.

அங்கு ஊர்வலம் நகரசபைக் காரியாலயத்தை அடைந்ததும் நகரசபை தலைவர் திரு.த.ஏகாம் பரம் அங்கு ஒரு கறுப்புக் கொடியை ஏற்றி வைத்து உணர்ச்சிகரமாக ஒரு சொற்பொழிவை நிகழ்த்தி னார். பின்னர் அங்கு திரளாக சென்று திருமலை மணிக் கூண்டுக் கோபுரத்தின் மீதும் கறுப்புக்கொடி உயர்த்தினார்.

தொடர்ச்சி▼




# தியாகி திருமலை நடராஜனும், கரிநாளான சுதந்திர தினமும்!

தொடர்ச்சி▲

இதைத் தொடர்ந்து திருமலை காளிகோயில் முன்றலில் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இராஜவரோதயம் தலைமை தாங்கி பேசினார்.

### தியாகியான நடராஜன்

இந்த நேரத்தில் வெடியோசைகள் கிளம்பின. எங்கேயோ பட்டாசு கொளுத்தப்படுகிறதென்று ஆரம்பத்தில் மக்கள் எண்ணினார்கள். ஆனால் நடராஜன் என்கிற இளைஞரின் மார்பில் குண்டு பாய்ந்ததால் அவர் பதறிக் கதறிக் கொண்டு அடிசாய்ந்தார்.

துடிக்கத் துடிக்க அவர் உயிர் பிரிந்தது. வ.நடராஜா என்கிற மற்றொரு இளைஞர் படுகாயப்பட்டார். முதியவர் ஒருவரின் கண்களினூடாக குண்டு பாய்ந்து விட்டது. இன்னொரு இளைஞருக்கு நெற்றியில் காயம் பட்டது. மற்றும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. சன சமுத்திரம் அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் குழப்பம். எங்கும் கலவரம். எங்கும் பயங்கரத் தத்தளிப்பு நிலவியது.

வெளியில் தலைவர்களும், மக்களும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில், சிங்களவர்கள் திரண்டு மார்க்கெற் வாயில்களை மறைத்து நிற்க, சிங்களவர் ஒருவர் மார்க்கெற்றுக்குள் மறைந்து நின்று, மார்க்கெற் ஜன்னல் துவாரத்தின் மூலம் இரட்டைக் குழல் துப்பாக்கியினால் குருட்டுவாக்கில் கூட்டத்தை நோக்கி இரண்டு முறை சுட்டிருக்கிறார்.

ரவைகள் நாலாத்திசைகளிலும் பாய்ந்து, தமிழ் மக்களைப் பலிகொண்டன. கொடி காக்கும் பணியில் தியாகி நடராஜன் தன் இன்னுயிரை ஈழ மண்ணுக்காக ஈய்ந்தார்.

### ஒரு மைல் தூர இறுதி ஊர்வலம்:

தியாகி நடராஜனின் புகழுடல் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை கிளை கையேற்றது. நடராஜன் புகழுடல் திருமலைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் சகல மரியாதைகளுடனும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (1957) பிற்பகல் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான மக்கள் சுமார் ஒரு மைல் நீளத்துக்கு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தெருநெடுகிலும் பெண்கள் கூடி நின்று கண்ணீர் வடித்தனர். நடராஜனின் புகழுடலை திருமலை நகரசபைத் தலைவர் த. ஏகாம்பரம், திருவாளர்கள் வி.ஏ. கந்தையா, எம்.பி. என்.ஆர்.இராஜவரோதயம் எம்.பி., எம். தாமோதரம்பிள்ளை, சட்டத்தரணி துரைநாயகம், கப்டன், ஏ.ஸி.கனகசிங்கம் ஆகியோர் கையேந்தித் தூக்கிச் சென்றனர்.

கந்தளாய் மயானத்தில் புகழுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. புகழுடலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த கட்டடத்தைக் கட்டி தமிழ் மொழியையும், கொடியையும் காக்க உயிர்நீத்த தியாகி நடராஜன் என்று பொறிக்க வேண்டும் என்று எல்லோராலும் அபிப்பிராயப்பட்டமைக்கு அமைய தகனம் செய்யப்படாமல் அடக்கம் செய்யப்பட்டது என சுதந்திரன் பத்திரிகை அப்போது செய்தி வெளியிட்டது.